பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 03 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலை சுமூகமாக நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

2. இந்தியா – பூட்டான் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

3. பாதுகாப்பு பணிகளில் மட்டுமின்றி, பேரிடர் காலங்களிலும் விமானப்படை மக்களுக்கு சேவையாற்றி வருவதாக அதன் தளபதி ஏர்சீப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி கூறியுள்ளார்.

4. இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க தேவையான சட்ட உதவிகளை செய்திடுமாறு மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

5. **Beirut** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

*- இனி விரிவான செய்திகள் -*

**<<<<<<>>>>>>**

மக்களவைத் தேர்தலை சுமூகமாக நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

ஏழு கட்டங்களாக நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, நாடு முழுவதும் 2 ஆயிரத்து 100 பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இந்த பார்வையாளர்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வார்கள் என்றும் தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களை, தேர்தல் ஆணைய பார்வையாளர்கள் மேற்பார்வையிடுவார்கள் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும், பாதுகாப்புப்படையினரை பணியமர்த்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டு, வாக்குப்பதிவு சுமூகமாக நடைபெறுவதை பார்வையாளர்கள் உறுதி செய்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியா – பூட்டான் இடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

அரசு முறைப்பயணமாக பூட்டான் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு **Tshering Tobgay** வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

எரிசக்தி, விளையாட்டு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான இந்த ஒப்பந்தங்கள் இரு தலைவர்களின் முன்னிலையில் கையெழுத்தாயின.

இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நீடித்துவரும் உறவுகள் குறித்தும் அவர்கள் விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது இந்த பயணத்தின்போது திரு நரேந்திர மோடி பூட்டான் மன்னர் திரு **Jigme Khesar Namgyel Wangchuck** –யையும் சந்திக்கவுள்ளார்.

**<<<<<<>>>>>**

நீர் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், நம் வாழ்வில் நீர் இன்றியமையா பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நீடித்த நீர் மேலாண்மைக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பாதுகாப்பு பணிகளில் மட்டுமின்றி, பேரிடர் காலங்களிலும் விமானப்படை மக்களுக்கு சேவையாற்றி வருவதாக விமானப்படை தளபதி ஏர்சீப் மார்ஷல் வி ஆர் சௌத்ரி கூறியுள்ளார்.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள ராணுவ கல்லூரியில் பயிற்சி அதிகாரிகளிடையே இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் இடையேயான மோதலின்போது உக்ரைனில் இருந்த இந்தியர்கள் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் விமானப்படை செயலாற்றி வருவதாக திரு வி ஆர் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில் நேற்று கைது செய்யப்பட்ட தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த கெஜ்ரிவாலை, பத்து நாள் அமலாக்கத்துறை காவலில் எடுக்க விடுத்த கோரிக்கை தில்லி சிறப்பு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கில் ஒன்பது முறை சம்மன் அனுப்பிய நிலையில், திரு கெஜ்ரிவால் ஆஜராகாததால் நேற்று அவர் அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கெஜ்ரிவால் தரப்பில் மூத்த வழக்கறிஞர் திரு அபிஷேக் சிங்வி ஆஜரானார்.

<<<<<<>>>>>

இதனிடையே திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தேர்தல் ஆணையத்தில் எதிர்க்கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகள் குழு இதுதொடர்பாக அளித்துள்ள புகார் மனுவில், எதிர்க்கட்சி தலைவர்களுக்கு எதிராக மத்திய விசாரணை அமைப்புகளை அரசு தவறாக பயன்படுத்துவதாக கூறப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றில் முதல் முறையாக பதவியில் உள்ள முதலமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு அபிஷேக் சிங்வி, தேர்தல் நடைமுறைகள் மற்றும் ஜனநாயகத்தை குலைக்கும் வகையில் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது நடவடிக்கை அமைந்திருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க தேவையான சட்ட உதவிகளை செய்திடுமாறு மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், அவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை செய்திடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் கடந்த சில வாரங்களாக இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது வேதனை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இந்த பிரச்சினையில் தாமதமின்றி தீர்வுகாண உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழக அமைச்சராக திரு பொன்முடி இன்று பதவியேற்றுக்கொண்டார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவருக்கு ஆளுநர் திரு ஆர் என் ரவி பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் சிலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கில், திரு பொன்முடி குற்றவாளி என்று அறிவித்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து திரு பொன்முடி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இதில் திரு பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதையடுத்து அவர் மீண்டும் சட்டப்பேரவை உறுப்பினராகும் தகுதி பெற்றார்.

அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு ராஜகண்ணப்பனுக்கு, கதர் மற்றும் கிராம தொழில்கள் வாரியம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொடர்பான முதல் தீர்மானத்திற்கு ஐ நா ஒப்புதல் அளித்துள்ளது.

சக்திவாய்ந்த புதிய தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவின் சேவைகள் சர்வதேச அளவில் அனைத்து நாடுகளுக்கும் ஆதரவு அளிப்பதை உறுதி செய்வதுடன், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து பாதுகாப்பான நம்பிக்கைக்குரிய வகையில் பயன்படுத்த இந்த தீர்மானம் வகை செய்கிறது.

அமெரிக்கா கொண்டுவந்த இந்த தீர்மானத்திற்கு 123 நாடுகள் ஒருமித்த கருத்துடன் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக, வாக்கெடுப்பின்றி இந்த தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஐ நா-வில் இடம்பெற்றுள்ள 193 உறுப்பு நாடுகளும், இந்த தீர்மானத்தை ஆதரித்துள்ளதாக ஐ நா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இலங்கை தலைநகர் கொழும்புவில், டிஜிட்டல் உள்கட்டமைப்பு மாநாடு வரும் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், அந்நாட்டு தொழில்நுட்ப அமைச்சகமும் இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, சேவை வழங்குவதை எளிமையாக்குவது மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது ஆகியவற்றை கருத்தில்கொண்டு இந்த மாநாடு நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் திரு ரனில் விக்ரமசிங்கே இந்த மாநாட்டில் தொடக்க உரையாற்றுகிறார்.

பல்வேறு தலைப்புகளில் விவாதங்களும் நடைபெறவுள்ளதாக இலங்கை அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

இந்தியா – **Mauritania** வெளியுறவு அமைச்சக பிரதிநிதிகள் நிலையிலான முதலாவது ஆலோசனைக்கூட்டம் **Nouakchott** –ல் நடைபெற்றது.

இருநாடுகளுக்கும் பலன் அளிக்கக்கூடிய பல்வேறு விஷயங்கள் குறித்து அப்போது ஆக்கப்பூர்வமான விவாதம் நடைபெற்றதாக வெளியுறவு அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

அரசியல், பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சிப்பணிகளில் உதவி, கலாச்சார பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இந்த ஆலோசனையில் இடம்பெற்றதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே உடனடியாக போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்மீது, ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவும், காஸா பகுதியில் பொதுமக்களை பாதுகாக்கவும் ஏதுவாக, அங்கு போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகு-வை டெல் அவிவ் நகரில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கன் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அப்போது போர் நிறுத்தத்தை கொண்டுவருவதற்கு ராஜ்ய ரீதியில் வலியுறுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, இஸ்ரேல் - ஹமாஸ் இடையே உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என ஐரோப்பிய யூனியன் வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Beirut** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், இந்தியாவின் மனவ் தாக்கரை வென்று இப்பட்டத்தை கைப்பற்றினார்.

--------------

உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் சென்னை - பெங்களூரு அணிகள் இன்று மோதுகின்றன.

சென்னையில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<END<>>>>>**